DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.210/21

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name பாக்கியலட்சுமி | Father’s Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.23

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அரண்மனைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் வயது மூப்பின் காரணமாக வீட்டில் இருக்கிறேன். எனது மகன் முருகேசன் ஒரு வருடத்திற்கு முன்பு 6 மணிக்கு வேலைக்கு போனான். அதற்கு பிறகு அவனுக்கு விபத்துஏற்பட்டதாக எங்களுக்கு போன் வந்தது. ஆம்புலன்ஸில் கவிலக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார். பக்கதது வீட்டு பையன் கவிலக்கு மருத்துவமனைக்கு எனது மகனை கொண்டு சென்றதாக சொன்னார். நானும் எனது பேத்தியும் கவிலக்கு மருத்துவமனைக்கு போய் மருத்துவரிடம் கேட்டோம் எனது மகன் மயக்கத்தில் இருப்பதாக சொன்னார். சிறிது நேரம் கழித்து எனது மகன் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். அதற்கு பிறகு அல்லிநகரம் காவல்நிலையம் சென்றோம். அங்கு எனது பேத்தி புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.